[1980 ஜூலை 28

அரசினர் கலைக் கல்லூரி, திருவண்ணாமலை.

*வினா எண் 59—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) திருவண்ணாமலை அரசினர் கலைக் கல்லூரியில் முதுநிலை பட்டப்படிப்பு துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கேட்டதைப்போல், திருவண்ணாமலைப் பகுதியில், குறிப்பாக தெற்குப் பகுதியில் அரசாங்கக் கல்லூரிகளிலும் தனிப்பட்டவர்கள் கல்லூரியிலும் இந்த மேல் பட்டப்படிப்பு வசதி இல்லை. இதை மனதிலே இருத்தி, அரசாங்க கலைக் கல்லூரியிலே இதற்கான இட வசதி, கட்டிட வசதி இருப்பதால், அங்கே இந்த மேல்நிலைப் பட்டப்படிப்பைத் துவங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அங்கிருக்கின்றவர்கள் பல்கலைக்கழகத்தோடு தொடர்புகொண்டு அதற்கான அனுமதி பெற வேண்டும். அரசு அவர்களுக்கு வேண்டிய ஆதரவைத் தருவதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, 75ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு அங்கிருந்து மேல் பட்டப்படிப்பு துவங்க வேண்டுமென்று அனுப்பப்பட்டது. அது என்ன ஆயிற்று? மற்றும், வட ஆற்காடு மாவட்டத்திலே சட்டக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்க இருப்பதாக அறிவிக்கப்பட்டது, இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே, வட ஆற்காடு மாவட்டத்தை ஏன் இந்த அரசாங்கம் புறக்கணிக்கின்றது என்பதை இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, எந்த மாவட்டத்தையும் புறக்கணிக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை. இப்போது இருக்கின்ற நிலைமைகளில் அபிவிருத்தியை முன்னேற்றத்தைச் செய்து கொண்டிருக்கிறோமே தவிர, அந்த முன்னேற்றத்தைத் தனிப்பட்டமுறையில் புறக்கணிக்கும் நோக்கம் இல்லை என்பதை கடந்த மூன்று ஆண்டுகளாக நடந்து வருகிற நிர்வாகச் சீர்திருத்தங்களைப் பார்த்தாலே தெரியும். வட ஆற்காடு மாவட்டம் பின்தங்கி இருக்கிறது என்று சொன்னால்

ஏற்கனவே பின்தங்கியிருந்த காரணத்தாலே பின்தங்கியிருக்கலாமே தவிர எங்களால் பின்தங்கியதாக ஆக்கப்படவில்லை. பின்தங்கிய பகுதிகள் தற்போது முன்னேறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் அங்கே இருந்து வருகிற ப்ரொபோசல்சை வைத்து பல்கலைக் கழகம் அந்த கல்லூரியைப் பார்த்து அங்கு இருக்கிற வசதிகளைப் பார்த்து அவர்கள் ஒரு முடிவு எடுக்கிறார்கள். அரசைப் பொறுத்தவரை நிலைமை—பி.யு.சி.யை எடுத்ததால் பல ஆசிரியர்கள் உபரியாக இருக்கிறார்கள், அவர்களைப் பயன்படுத்துகிற வகையில் புதிய பிரிவுகளை ஆரம்பிக்க வேண்டுமென்பதே தவிர, புதிய பிரிவுகளை ஆரம்பிக்கக்கூடாது என்ற நிலைமை இல்லை. இட நெருக்கடி ஏற்பட்டு மாணவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்ற நிலை ஏற்பட்டபோது கூட பொதுவான அறிவுரை கூறியிருக்கிறோம்—புதிதாக என்னென்ன பிரிவுகளை ஆரம்பிக்க முடியுமோ அவற்றை ஆரம்பிக்க உடனடியாக அனுமதி பெற்று ஆரம்பிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறோம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏழு கல்லூரிகள் இருந்தும் எம்.எஸ்.ஸி., கோர்ஸ் இல்லாததால்.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி திருவண்ணாமலையைப் பற்றியது.

திரு. பாபு ஜனார்த்தனன் : அடுத்த ஆண்டிலாவது திருவண்ணாமலையில் மேல் பட்டப்படிப்பு வகுப்புகள் துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கேள்வியின் நோக்கமே அடுத்த ஆண்டு ஆரம்பிப்பதற்கு அரசு உறுதி வழங்க முடியுமா என்ற அடிப்படையில்தான் கேட்கப்படுகிறது. இந்தப் பிரிவுகளை ஆரம்பிக்கும் முயற்சியை முதலில் அந்தக் கல்லூரி எடுத்துக் கொண்டு, பல்கலைக் கழகம் ஏற்றுக் கொண்டவுடன் அரசு அதற்கான உதவிகளை அளிக்கும் நிலைமை இருக்கிறது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அப்படிப்பட்ட முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டால் நிச்சயமாக அரசு தேவையான உதவிகளைச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 60 மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகிறது.